பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

03 07 2024 **WEDNESDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

1. குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது மாநிலங்களவையில் பிரதமர் திரு நரேந்திர மோடி தற்போது பதிலளித்து பேசிவருகிறார்.

2. செயற்கை நுண்ணறிவு இயக்கம் 10 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் விரைவில் செயல்படுத்தப்படும் என்று மத்திய அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

3. மூன்று குற்றவியல் சட்டங்களும் ஆங்கில எழுத்துக்களில்தான் பெயரிடப்பட்டுள்ளன என்று மத்திய அரசு சென்னை உயர்நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

4. சூரியனை ஆய்வு செய்வதற்காக அனுப்பப்பட்ட முதலாவது விண்கலம் ஆதித்யா-எல்-ஒன் தனது புவி வட்ட சுற்றுப்பாதையில் முதல் நிலையை வெற்றிகரமாக கடந்துள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

5. கனடா ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் கிருஷ்ணபிரசாத் - சாய் பிரதீக் இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

---- *இனி விரிவான செய்திகள்* --

**<<<<<<>>>>>>**

மாநிலங்களவையில் இன்று, குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பிரதமர் திரு நரேந்திர மோடி தற்போது பதிலளித்து பேசிவருகிறார்.

முன்னதாக, விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய **U P P (L)** கட்சியின் உறுப்பினர் திரு **Rwngwra Narzary,** பிரதமர் திரு நரேந்திர மோடியின் கிழக்கத்திய நாடுகள் கொள்கை மூலம், நாட்டின் வடகிழக்கு மாநிலங்கள் வளர்ச்சி பெற்றுள்ளதாக தெரிவித்தார்.

உள்நாட்டு தீவிரவாதத்தை கட்டுப்படுத்தும் வகையில் தீவிரவாத குழுக்கள் இடையே அமைதி பேச்சுவார்த்தை நடத்தி அவர்களின் மறுவாழ்வுக்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அஸ்ஸாம் மாநிலத்தில் முதலமைச்சர் திரு ஹிமந்த பிஸ்வா சர்மா தலைமையிலான அரசின் சீரிய நடவடிக்கைகளால் பெரிய அளவில் பொருளாதார வளர்ச்சி காணப்பட்டுள்ளதாக கூறினார்.

முன்னதாக, அவையில் ஹத்ராஸில் நடைபெற்ற ஆன்மிக கூட்டத்தின்போது நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

அப்போது பேசிய அவைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர், இந்த சம்பவம் மிகவும் வேதனை அளிப்பதாக தெரிவித்தார்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவிப்பதாகவும் அவர் கூறினார்.

காயமடைந்தவர்களுக்கு தேவையான மருத்துவ வசதிகள் செய்யப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இந்த சம்பவம் குறித்து விசாரிக்க குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவையில் அவர் தெரிவித்தார்.

மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே பேசுகையில், இதுபோன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் ஏற்படாமல் தடுக்க சட்டங்கள் கடுமையாக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இந்த சம்பவம் குறித்து உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா அறிக்கை வெளியிட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

மறைந்த உறுப்பினர்களுக்கும் அவையில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

<<<<<<>>>>>>

தொழில்நுட்பத்தை ஜனநாயக கட்டமைப்புக்குள் கொண்டுவரும் நோக்கில், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்த வேண்டும் என்ற அணுகுமுறையை இந்தியா பின்பற்றி வருவதாக மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று உலகளாவிய இந்திய செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உச்சிமாநாட்டை தொடங்கிவைத்து பேசிய அவர், தொழில்நுட்பத்தின் பயன்கள் அனைத்துத்தரப்பினருக்கும் கிடைக்க வேண்டும் என்று கூறினார்.

செயற்கை நுண்ணறிவு இயக்கத்தை 10 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் இந்தியா விரைவில் செயல்பாட்டுக்கு கொண்டுவர உள்ளதாக அவர் தெரிவித்தார்.

பொதுத்துறை, தனியார் கூட்டு முயற்சியில் செயற்கை நுண்ணறிவு கட்டமைப்பு உருவாக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துக்கான ஒழுங்குமுறை சட்டத்தை கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருவதாக அவர் கூறினார்.

இந்த தொழில்நுட்பத்திற்கான கண்டுபிடிப்பு மையத்தை விரைவில் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும், இதனால் புத்தாக்க நிறுவனங்களும் ஆராய்ச்சியாளர்களும் பயன்பெறுவர் என்றும் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

மக்களவை எதிர்க்கட்சித்தலைவரும், காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு ராகுல்காந்தி சில சமூகத்தினருக்கு எதிரான கருத்துக்களை கூறியதாக தில்லியில் பிஜேபி-யினர் இன்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இக்கூட்டத்தில் பேசிய தில்லி பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர் பன்சூரி ஸ்வராஜ், திரு ராகுல்காந்தி எந்தவொரு பொறுப்பும் இன்றி கருத்துக்களை கூறுவதை ஏற்க முடியாது என்று கூறினார்.

இதனிடையே, இந்த ஆர்ப்பாட்டம் தொடர்பாக கருத்து தெரிவித்த திரு ராகுல்காந்தி, தாம் எந்தவொரு சமூகத்தினர் குறித்தும் தவறான கருத்துக்களை தெரிவிக்கவில்லை என்றும், பிஜேபி-யின் நடவடிக்கைகள் குறித்து மட்டுமே கருத்து தெரிவித்ததாகவும் கூறினார்.

<<<<<<>>>>>>

உத்திரபிரதேச மாநிலம் ஹத்ராஸ் மாவட்டத்தில் நேற்று ஆன்மிக நிகழ்ச்சியின்போது நேரிட்ட கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 121-ஆக உயர்ந்துள்ளது.

அலிகார், ஆக்ரா, **Etah**, ஹத்ராஸ் ஆகிய இடங்களில் உள்ள மருத்துவமனைகளில் 28-க்கும் மேற்பட்டோர் பலத்த காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதனிடையே, இன்று ஹத்ராஸ் சென்ற முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத், கூட்ட நெரிசலில் சிக்கி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை சந்தித்து ஆறுதல் கூறினார்.

இத்துயர சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரையும் சந்தித்து அவர் பேசவுள்ளார்.

<<<<<<>>>>>>

சூரியனை ஆய்வு செய்வதற்காக அனுப்பப்பட்ட முதலாவது விண்கலம் ஆதித்யா-எல்-ஒன் தனது புவி வட்ட சுற்றுப்பாதையில் முதல் நிலையை வெற்றிகரமாக கடந்துள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

எவ்வித இடர்பாடும் இன்றி இரண்டாவது சுற்றில் இந்த விண்கலம் தற்போது பயணித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

மூன்று குற்றவியல் சட்டங்களும் ஆங்கில எழுத்துக்களில்தான் பெயரிடப்பட்டுள்ளன என்று மத்திய அரசு, சென்னை உயர்நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

இந்த புதிய சட்டங்கள் கடந்த ஒன்றாம் தேதி முதல் அமலுக்கு வந்துள்ள நிலையில், இந்தி மற்றும் சமஸ்கிருதத்தில் பெயர் சூட்டப்பட்டுள்ளது அரசியல் சட்டத்துக்கு விரோதமானவை என அறிவிக்கக்கோரி வழக்கு தொடரப்பட்டுள்ளது.

பொறுப்பு தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வின்முன் இந்த வழக்கு இன்று விசாரணைக்கு வந்தபோது பதிலளித்த மத்திய அரசின் வழக்கறிஞர், ஆங்கில எழுத்தில்தான் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளதாகவும், சட்டங்களுக்கு பெயர் சூட்டும் விவகாரம் நாடாளுமன்றத்தின் விருப்பம், இதில் நீதிமன்றம் தலையிட முடியாது என்றும் கூறினார்.

இதனையடுத்து, இந்த மனுவிற்கு இம்மாதம் 23-ஆம் தேதிக்குள் பதிலளிக்குமாறு மத்திய அரசுக்கு நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

<<<<<<>>>>>>

தெலங்கானாவில் 203 கைதிகளை முன்கூட்டியே விடுதலை செய்ய மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

நீண்டகாலமாக சிறைவாசம் அனுபவித்து வருபவர்களின் குடும்பத்தினரின் வேண்டுகோளை ஏற்று முதலமைச்சர் திரு ரேவந்த் ரெட்டி இதற்கான உத்தரவை பிறப்பித்துள்ளார்.

<<<<<<>>>>>>

ஜார்கண்ட் முக்திமோர்ச்சா கட்சியின் செயல் தலைவரும், ஜார்கண்ட் முன்னாள் முதலமைச்சருமான திரு ஹேமந்த் சோரன் இன்று **I N D I**

கூட்டணியை சேர்ந்த சட்டப்பேரவை உறுப்பினர்களுடன் ஆலோசனை நடத்தவுள்ளார்.

மாநிலத்தின் தற்போதைய அரசியல் சூழ்நிலை குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னதாக, ஜார்கண்ட் முக்திமோர்ச்சா கட்சியின் தலைவர் திரு சம்பை சோரனும், திரு ஹேமந்த் சோரனும் தனிப்பட்ட முறையில் ஆலோசனை நடத்தினர்.

இக்கூட்டத்தில் காங்கிரஸ், ராஷ்ட்ரிய ஜனதாதள் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்கின்றனர்.

<<<<<<>>>>>>

நேபாளத்தில், நேபாளி காங்கிரஸ் கட்சியும், நேபாள கம்யூனிஸ்ட் கட்சியின் **'UML '** பிரிவும் இணைந்து புதிய அரசு அமைக்க ஒப்புக்கொண்டுள்ளன.

இரு கட்சிகளும், அதிகாரத்தை பகிர்ந்துகொள்ளவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

கூட்டணி ஆட்சியை சுமூகமாக நடத்தி செல்வது குறித்து தலைவர்கள் தொடர்ந்து ஆலோசனை நடத்தி வருவதாக எமது காட்மாண்டு செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தின் விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை அருகே கரிசல் குளத்தில் மூன்றாவது கட்ட அகழாய்வுப்பணிகள் நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - கமலக்கண்ணன் - 36 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

பாலஸ்தீன நாட்டின் துல்கர்ம் நகரில் இஸ்ரேலிய விமானப்படையினர் நடத்திய வான்வழி தாக்குதலில் நான்கு பேர் கொல்லப்பட்டனர்.

இதுதொடர்பாக பாலஸ்தீன சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இஸ்ரேலிய விமானங்கள் முகாமில் தங்கியிருந்த இளைஞர்களை குறிவைத்து இந்த தாக்குதலை நடத்தியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து இஸ்ரேலிய ராணுவம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், துல்கர்ம் நகரில் விமான தாக்குதல் நடத்தப்பட்டதை உறுதி செய்துள்ளது.

**Nurshams** முகாமில் வெடிப்பொருட்கள் வைக்கப்பட்டிருந்தது உறுதி செய்யப்பட்டபின் இந்த விமான தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் கூறியுள்ளது.

<<<<<<>>>>>>

யுக்ரைன் போரை முடிவுக்கு கொண்டுவருவதற்காக மாஸ்கோவில் நடைபெறவுள்ள அமைதி பேச்சுக்களுக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்கும் வகையில், யுக்ரைன் அதிபர் திரு விளாடிமீர் ஜெலன்ஸ்கி, போர் நிறுத்தத்திற்கான அறிவிப்பை வெளியிட வேண்டும் என்று ஹங்கேரி பிரதமர் திரு விக்டர் ஆர்பன் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஹங்கேரி பிரதமர் திரு ஆர்பன், ரஷ்ய அதிபர் திரு விளாடிமீர் புட்டினுக்கு நெருக்கமானவர் என்று கூறப்படுகிறது.

இதனிடையே, யுக்ரைன் வெளியுறவு அமைச்சர் திரு டிமிட்ரோ குலேபா, திரு ஆர்பனுடன் அமைதி நடவடிக்கைகள் குறித்து அதிபர் திரு ஜெலன்ஸ்கி ஆக்கப்பூர்வமான வகையில் பேச்சு நடத்தியிருப்பதாக தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

பங்களாதேஷ் தலைநகர் டாக்கா சென்றுள்ள இந்திய கடற்படை தலைமை தளபதி அட்மிரல் தினேஷ் கே திரிபாதி, பிரதமர் திருமதி ஷேக் ஹசீனாவை சந்தித்து பேசினார்.

அப்போது 1971-ஆம் ஆண்டு பங்களாதேஷ் போரின்போது இந்தியா அளித்த ஆதரவை திருமதி ஹசீனா நினைவுகூர்ந்தார்.

இரு நாடுகளுக்கு இடையே கடல்சார் பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பு குறித்த விஷயங்களில் ஏற்பட்டுவரும் முன்னேற்றங்கள் குறித்தும் அவர் விவாதித்தார்.

இந்திய கடற்படைக்கும், பங்களாதேஷ் கடற்படைக்கும் இடையோன ஒத்துழைப்பு குறித்தும் பங்களாதேஷ் பிரதமர் திருமதி ஷேக் ஹசீனா, இந்திய கடற்பரை தளபதியுடன் ஆலோசனை நடத்தினார்.

**<<<<<<>>>>>>**

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

கனடா ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் கிருஷ்ணபிரசாத் - சாய் பிரதீக் இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 21-19, 21-11 என்ற செட் கணக்கில், கனடாவின் **Lap Kan Pong -** இங்கிலாந்தின் **Larry Pong**- இணையை வென்றது.

------------

விம்பிள்டன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ரோகன் போப்பண்ணா, சுமித் நாகல் ஆகியோர் தத்தமது இணையுடன் இன்று பங்கேற்கவுள்ளனர்.

**<<<<<<>>>>>>**